**இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் | | |
| (i) நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிப் பிரிவிற்கு செலுத்துவதற்காக கிடைத்த வெகுமதிக் கோவை மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு அந்த பிரிவிற்கு கிடைக்காத பல்வேறு பிரிவுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வெகுமதி கோவைகள் மற்றும் நிலுவை தண்டப் பண வருமானம் கவனத்தில் கொள்ளாமல் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | சகல தண்டப் பணமும் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனை வருமானம் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படுவதுடன் அந்தப் பணம் அந்த ஆண்டின் போது செலுத்தி வைக்கப்படுவது இல்லை. விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் சில விசாரணைகளுக்குரிய தண்டப் பணம் மீண்டும் உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளது. அதனால் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் கீழ் விசாரணை நடவடிக்கைகள் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்பத்திலேயே செலவு வைக்கப்படுகின்றது. இந்த நிலைமை எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் வரையில் விசேட வெளிப்படுத்தல்களின் கீழ் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | எரிபொருள் நிதியம், போதைப் பொருள் நிவாரண நிதியம், மற்றும் உதவியாளர் சேவை வழங்குகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக செலுத்துதல் நிதியத்தில் (2.5 சதவீத நிதியம்) திரண்ட மீதியான ரூபா 1,530,781,892 பெறுமதி நடைமுறை / நடைமுறையல்லா பொறுப்பாக இனங்காண்பதற்கு பதிலாக உரிமை மூலதனத்தின் கீழ் நிதியமாக காண்பிக்கப்படடுள்ளது. | இந்த உப நிதியங்களின் உள்ள நிதியில் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற செலவினங்கள் செய்ய வேண்டி ஏற்படுகின்றமையால் அந்த மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா பொறுப்பாக உள்ளடக்கப்படுகின்ற பகுதியில் நிதியமாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இது நடைமுறையல்லா பொறுப்பாக காண்பிப்பதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது உதவியாளர் சேவை வழங்குகின்ற பிரிவுகளில் உத்தியோகத்தர்களுக்காக நிதியத்தில் இருந்து (2.5 சதவீத நிதியம்) ரூபா 25,530,106 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,496,264 ஆக காண்பிக்கப்பட்டமையால் அந்த கொடுப்பனவுகள் ரூபா 10,033,842 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட வேறுபாட்டை சீராக்குவதற்காக 2023 திசெம்பர் மாதத்தின் போது வெகுமதி நிதியத்தில் இருந்து ஏனைய ஒதுக்கம் (other pools) இற்கான நிதியத்தில் ஒதுக்கப்பட்ட அளவு ரூபா 10,033,842 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கணக்கீடு செய்யும் போது இடம் பெற்ற தவறுகள் முறையாக திருத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வெகுமதி நிதியத்திற்காக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒட்டு மொத்த கோவைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 8,247,989,408 ஆக இருந்த போதிலும் கணக்கு குறிப்பு இலக்கம் 2.6.1 இல் ரூபா 3,295,256,449 ஆக பிழையாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அந்தக் கணக்கு குறிப்புக்களில் செலுத்தப்பட்ட ஒட்டு மொத்த கோவைகளின் பெறுமதியான 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் மே வரை செலுத்தப்பட்ட அண்ணளவாக ரூபா 3,135,184,683 பெறுமதி கவனத்தில் கொள்ளாமல் தவிர்த்து யூன் முதல் திசெம்பர் மாதம் வரை செலுத்தப்பட்ட ரூபா 7,846,092,400 பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட தவறுகள் தரவின் அடிப்படையில் ஏற்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வெகுமதி நிதியத்தின் மீதியாக காண்பிக்கப்பட்ட ரூபா 200,948,504 பெறுமதியை சரி செய்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பரீட்சை மீதியில் எரிபொருள் நிதியம், போதைப் பொருள் நிவாரண நிதியம், (நாக்கொட்டிக் நிதியம்) உதவி சேவைகள் வழங்குகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக செலுத்துகின்ற நிதியம் (2.5 சதவீத நிதியம்) மற்றும் ஏனைய ஒதுக்கம் (other pools) இற்கான நிதியங்களில் செலவு மீதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற | 1,844,632,679 | 1,382,870,064 | 461,762,615 | பரீட்சை மீதியில் நிதியங்களின் ஆரம்ப மீதி காண்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றில் இறுதி மீதியே காண்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறுபாட்டுக்கான காரணம் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி, அதற்கு நேரொத்த அறிக்கைகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

மீதிகளுடன் முறையே ரூபா 180,744,198 தொகை, ரூபா 61,565,303 தொகை ரூபா 87,735,802 தொகை மற்றும் ரூபா 131,717,312 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 461,762,615 இணக்கமின்மை காணப்பட்டது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (2) (ஆ) பிரிவு | (i) | வெகுமதி நிதியத்தில் வெகுமதி பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதியமைச்சரின் இணக்கப்பாடை பெற்று அதற்காக பொருத்தமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 1988 சனவரி 28 ஆந் திகதிய இலக்கம் பீஎல் 118 என்ற திணைக்கள கட்டளைக்காக நிதியமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தாமல் 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 12 வருட காலத்தில் வெகுமதி உத்தியோகத்தர்களுக்காக ரூபா 19,429,331,820 தொகையும் ஒற்றர்களுக்காக ரூபா 2,980,886,848 தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | திணைக்கள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணப்படுகின்ற தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு ஒற்றர்களுக்கும் மற்றும் விசாரணைகளுக்காக அடிப்படையாக செயற்பட்ட தரப்பினர்களுக்கும் செலுத்துவதற்காக சுங்க பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இயலுமை காணப்பட்டது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) சுற்றறிக்கையின் சுங்க கட்டளைனச் சட்டத்தின் 153 (2) (ஆ) பிரிவின் பிரகாரம் முன்மொழிவு திட்டத்தின் பிரகாரம் இடையே பகிர்ந்தளிக்க வேண்டியிருந்த போதிலும் இலக்கம் பீஎல் 118 என்ற திணைக்களத்தின் 1988 முதல் இதுவரை திருத்தப்பட்ட 19 அரசுடமையாக்கப்பட்ட பணம் மற்றும் தண்டப் பணங்களில் அந்த பணிகளில் நேரடியாக பங்களிப்பாக சுங்கத்தின் ஏனைய 18 பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக இவ்வாறு அந்த பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வெகுமதி நிதியத்தின் பெறுமதி ரூபா 444,437,389 ஆகும். | சுங்க திணைக்களத்தின் செயலாற்றல் சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பின் அடிப்படையில் இடம் பெறுகின்ற செயலாற்றலாக இருந்தமையால் இருந்தமையால் சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஊக்குவித்தலை நோக்கமாக கொண்டு சுங்க சுற்றிவளைத்தல் மற்றும் தொடர்புடைய சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் வெகுமதி பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றோம். | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 110 | வெளிநாட்டு தனியார் நிறுவனங்களினால் கப்பலில் இடப்படுகின்ற பொருட்களை மாற்றும் முறைமையின் கீழ் (Transshipment) சிங்கப்பூரில் இருந்து கப்பல் இடப்பட்ட புகையிலை இருப்பிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் இறுதியில் அந்த புகையிலையின் இருப்பு ரூபா 5,901,750 ஆக ஏலம் இடப்பட்டிருந்தது. எனினும் அந்த உரிய வெளிநாட்டு நிறுவனத்தால் வழக்கில் இருந்து சுங்கம் குற்றவாளியாக இருந்தமையால் சுங்கத்திற்கு இந்த தவறை தீர்மானிக்கும் அடிப்படையில் ரூபா 69,451,809 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. உரிய இந்த விசாரணை கோவைகளும் பின்னர் தொலைந்து போய் | ஆரம்ப விசாரணைக் குழு தலைவரால் ஆரம்ப விசாரணையின் தற்போதைய நிலைமை தொடர்பான விடயங்களைக் காண்பித்து 2024.03.19 ஆந் திகதி இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் காண்பிக்கப்பட்டுள்ள இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் விசாரணை | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இருந்ததுடன் அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்கூறப்பட்ட தவறை தீர்மானிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட 2023 மே 11 ஆம் திகதிய ஆரம்ப விசாரணைக்குழு அறிக்கை இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2024 மே 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை பூர்த்தி செய்து இறுதி அறிக்கையை பெற்றுக்கொள்ளப்படு கின்றது. மேலும் இது வரையில் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 424,344,028 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 217,437,608 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 206,906,420 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு தண்டப் பணம் ரூபா 2,426,905,437 உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறக்குமதியாளர்களால் அவர்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரனையின் விளைவாக விதிக்கப்பட்ட உரித்தற்றுக்கள் மற்றும் தண்டப் பணத்திற்கு எதிராக வழக்கொண்று தொடரப்பட்டு இருந்ததுடன் அதில் சுங்கம் அறவிட்ட தொகையில் ரூபா 31,000,000 இறக்குமதியாளருக்கு மீள செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. உரித்தற்றவைகள் மற்றும் தண்டப் பண பெறுமதியில் 50 சதவீதம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் வெகுமதி நிதியம் பெற்ற உத்தியோகத்தர்கள் அண்ணளவாக 541 பேர் அளவில் இருக்கும் போது அவர்களிடம் இருந்து எந்தவொரு தொகையும் மீள அறவிடப்படாமல் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட அளவு மற்றும் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதி செலவு வைக்கப்பட்ட அளவு | வெகுமதி கோவை முழுமையாக செலுத்தி முடிக்கும் போது வெகுமதி கோவைக்குரிய உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்க நிதியத்திற்காக (Pool Fund) ஒதுக்கப்பட்ட தொகையில் 541 உத்தியோகத்தர் தரப்பினருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தமையும் ரூபா 2,716,696 அரசாங்கத்தின் வரியாக செலுத்தப்பட்டமையினால் அதில் ரூபா 29 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு நடைமுறையில் வசதியீனமாக இருந்தமை சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் உரிய நிறுவனம் இந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடாமல் செலுத்த வேண்டிய தொகை | அரச வருமானத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள பெறப்பட்டு இறக்குமதியாளருக்கு இழப்பீட்டு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியதன் அடிப்படையில் பணம் மீள செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | தனியார் கம்பனியால் போலியான பட்டியல் சமர்ப்பித்து இறக்குமதி செய்யப்பட்ட கால் நடை உணவு இருப்புக்குரிய அந்த கம்பனி விலகுவதற்கு உற்சாகமளித்த வரி பெறுமதி ரூபா 15,198,755 ஆக இருந்ததுடன் குறைவாக காண்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (Under Value) ரூபா 63,519,586 ஆகும். எனினும் விசாரணை இறுதியின் போது மோசடி செய்வதற்கு உற்சாகம் அளித்த சுங்கவரி பெறுமதிக்காக ரூபா 500,000 இலகுபடுத்தப்பட்ட உரித்தற்றல்கள் மற்றும் குறைவாக காண்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதிக்காக ரூபா 19,000,000 உரித்தற்றல் ஒன்று மாத்திரம் விதிப்பதற்கு விசாரணை உத்தியோகத்தர்கள் மாத்திரம் நடவடிக்கைகள் எடுத்திருந்தனர். அதன்போது விடுவிப்பதற்கு உற்சாகம் அளித்த வரி பெறுமதி உடன் ஒப்பிடும் போது விதிக்கப்பட்ட தண்டப் பணம் 3.2 சதவீதம் ஆன மிகவும் குறைந்த பெறுமதி ஆகும். அதனால் அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காக சுங்கம் மிகவும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை இதன்போது அறிவுறுத்தப்பட்டது. | அந்த ரூபா 500,000 தொகை இலகுபடுத்தப்பட்ட உரித்தற்றலாக சுங்க கட்டளைச் சட்டத்தின் 129 மற்றும் 163 ஆம் பிரிவின் கீழ் மோசடி செய்வதற்கு உற்சாகம் அளித்த சுங்க வரி பெறுமதி அல்லாமல் இருந்ததுடன் சுங்க தவறும் அறிவிக்கப்பட்ட நிலைமையுடன் மேற்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. முறையான சுங்க பரிசோதனை (customs inquiry) நடாத்தியதன் பின்னரே விதிக்கப்படுகின்றது. மேலும் விசாரணை உத்தியோகத்தரால் இலகுபடுத்தப்பட்ட உரித்தற்றல்கள் மேற்கொள்ளல் சுங்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்பட்டது. | அரச வருமானத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இந்தியாவில் இருந்து வெள்ளை சீனி என கூறி இறக்குமதி செய்யப்பட்ட சீனி இருப்பொன்று சுங்கத்தின் இடர் முகாமைத்துவ அலகு (RMU) மூலம் அதிக ஆபத்துடனாக இருந்தமை வகைப்படுத்தப்பட்டு ஆழமாக பரீட்சிப்பதற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் உரியவாறு மேற்கொள்ளாமை மற்றும் தெரிவு செய்யப்பட்ட வழுக்களை கண்டு பிடிப்பதற்கு உரிய அளவில் போதியளவில் இல்லாமையினால் இந்த கொள்கலனில் சிவப்பு சீனி இருப்பும் இருந்த போதும் சுங்கத்தால் பொருள் விடுவிக்கப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் தரம் மற்றும் வசதிகளை கவனத்தில் கொண்டு வழங்கும் பிரிவிற்கு பின்னர் கிடைத்த தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளியிடப்படாத சிவப்பு சீனி 20 கொள்கலன்களும் அதில் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் இறுதியில் இறக்குமதியாளருக்கு எதிராக ரூபா 500,000 தண்டம் மற்றும் ரூபா 189,293,778 உரித்தற்றவை விதிக்கப்பட்டிருந்ததுடன் இறக்குமதியாளர் அந்த தண்டப்பணத்திற்கு இணங்கியமையின் அடிப்படையில் அரசுடமையாக்கப்படாத ரூபா 190,000,000 வங்கி பிணை முறியின் அடிப்படையில் பொருள் இருப்பு சுங்க பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட தண்டப் பணத்தை இலகுபடுத்திய இறக்குமதியாளரால் மேற்கொள்ளப்பட்ட மேன் முறையீட்டின் முதலாவது சந்தர்ப்பத்தின் போது பின்னர் அது அந்த முறைப்பாடை கவனத்தில் கொண்டு விதிக்கப்பட்ட தண்டப் பணம் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கௌரவ அமைச்சரால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அது அந்த முறைப்பாடை கவனத்தில் கொண்டு விதிக்கப்பட்ட தண்டப் பணம் ரூபா 30 மில்லியனால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது சந்தர்ப்பத்தில் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட இலகுபடுத்தலுக்கான காரணம் விளக்கப்படவில்லை. | கௌரவ நிதி அமைச்சரால் தண்டப்பணம் ரூபா 30 மில்லியனால் இலகுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகும். | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ii) | இந்த இலகுபடுத்தலினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ஒட்டு மொத்த அரச வருமானம் இழப்பு ரூபா 56,106,333 ஆகும். | பிரச்சினையுடனான சிவப்பு சீனி இருப்பாக மெற்றிக்தொன் 607.55 அளவு சட்டரீதியாக இறக்குமதி செய்யப்பட்டிருக்குமாயின் அதற்காக செலுத்த | அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வருமானம் உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| | வேண்டிய வரித்தொகை ரூபா 56,410,083 ஆக இருந்தமை சுங்க பரிசோதனைகளின் போது கணிப்பிடும் செயற்பாடுகள் மூலம் அவதானிக்கப்பட்டது. வெள்ளை சீனி மற்றும் சிவப்பு சீனி என்ற இரண்டு வகைகளை உடைய மொத்த சீனி இருப்பின் நிறை மெற்றிக் தொன் 1,214.90 அளவாக இருந்ததுடன் அந்த மொத்த அளவும் சிவப்பு சீனியாக வெளிப்படுத்தி ரூபா 303,750 வரித்தொகை இறக்குமதியாளரினால் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் இறக்குமதியாளர்களால் 10 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு சுங்க தவறுகள் மேற்கொண்டு ரூபா 59,583,245 வரித்தொகை செலுத்துதல்களை புறக்கணிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சுங்கத்தால் விதிக்கப்பட்ட மொத்த தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 1,821,501,276 ஆகும். தண்டப் பண பெறுமதி பின்னர் இலகுவகப்படுத்தப்பட்டமையால் அது ரூபா 88,116,774 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் இலகுபடுத்தப்பட்ட தண்டப்பண பெறுமதி அரசாஙக்த்திற்கு செலவு வைக்கப்பட்ட 30 சதவீதப் (30%) பெறுமதி ரூபா 26,435,033 ஆக இருந்ததுடன் புறக்கணிப்பதற்று முயற்சி எடுத்த வரித்தொகையாக ரூபா 59,583,245 தொகையுடன் ஒப்பிடும் போது அது ரூபா 33,148,213 இனால் அரச வருமானத்தின் குறைவாக இவ்வாறு தண்டப் பணத்தில் உழைக்கப்பட்ட தொகையில் அரசாங்கம் உழைக்க கூடியதாக காணப்பட்ட வருமானம் மற்றும் சராசரி முறைமையின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வரி வருமானம் மிகவும் கீழ் பெறுமதியில் சுங்கம் அரசாங்கத்திற்காக வருமானம் உழைக்கும் முயற்சி முன்னுரிமை | சுங்க பரிசோதனையின் போது வழங்கப்பட்ட தீர்மானத்தில் அரைவாசி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு சமமாகும். சுங்க பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்ட சகல சான்றுகளின் கவனத்தில் கொண்டே தீர்மானம் எடுக்கப்படுவதுடன் அதற்காக தேவையான ஏற்பாடுகள் 129, 130, 163 மற்றும் 166B பிரிவுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய வருமானத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பு ஈடுபடுகின்ற நிறுவனமாக செயற்பட்டிருந்தா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | | |
| (ஆ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதியின் போது சுங்க வரிகளில் இருந்து அல்லது அதன் ஏதாவது பகுதி ஒன்று மோசடியாக புறக்கணித்தல் அல்லது புறக்கனிப்பதற்கு உற்சாகம் அழித்தல் அல்லது தெரிந்திருந்தே தொடர்புடைய சகல நபர்களும் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் விருப்பதின் பிரகாரம் அந்தப் பொருட்களின் பெறமதியின் இரு மடங்கிற்கு உரித்தற்ற வகையின் கீழ் கவனத்தில் கொள்ள வேண்டும். எனினும் தெரிவுப் பரிசோதனையின் கணக்காய்வின் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் மாத்திரம் அந்தப் பொருட்களின் பெறுமதிக்கு சமனான பெறுமதி ஒன்று தண்டப் பணமாக விதிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 07 சந்தர்ப்பங்களிலும் பொருட்களின் பெறுமதியை விட குறைந்த தண்டப் பணமாக விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுங்க தவறுகளுக்காக கவனத்தில் கொள்ளக் கூடிய தண்டப் பணம் ஒன்றை விதிப்பதற்கு தவறியிருந்தமையால் உரிய நபர்கள் தொடர்ந்தும் மோசடி தவறுகளில் ஈடுபடுவதற்கு கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது புறந்தல்ல முடியாது இருந்தது. | -மேற்படி- | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (இ) | தண்டப் பணம் விதிக்கும் போது அதனை மீறியதன் கடுமையான விளைவு, மீறியதன் விளைவாக உரித்தற்றுப் போன வருமான அளவு மற்றும் மீறுதலை மேற்கொண்ட பொருட்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பிரகாரம் அல்லது பற்றாக்குறை போன்ற சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய போதிலும் சுங்க கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவில் காண்பிக்கப்படாத இறக்குமதியாளர்களின் கஸ்ட நிலைமையினால் தண்டப் பணத்தை இலகுபடுத்தியதன் காரணத்தை காண்பித்து தண்டப் பணங்கள் குறைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டது. | -மேற்படி- | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் போது முடிவடைந்த விசாரணைகளுக்காக அடிப்படையான சுங்க தவறு வகைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது 1902 விசாரணைகளுக்கு இடையே | -மேற்படி- | வலுவான சட்ட முறைமையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்படாத பொருட்கள் இறக்குமதி செய்வதற்குரிய 498 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக மிகை அளவு இறக்குமதி செய்தல் தொடர்பான 224 விசாரணைகளும், பெறுமதி குறைத்து மதிப்பீடு செய்தல் தொடர்பாக 207 விசாரணைகளும் காணப்பட்டன. எனினும் வலுவான சட்ட முறைமையொன்று ஸ்தாபிப்பதன் மூலம் இந்த பொதுவான சுங்க தவறுகள் கவனத்திற்கு உரிய மட்டத்தில் குறைக்க கூடியதாக இருப்பதுடன் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய இறக்குமதி வருமானம் சரியா உரிய பிரகாரம் சரியாக அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான இயலுமையும் காணப்படுகின்றமையால் அதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டி இருந்தது. | | கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | பொருட்களை விடுவிக்கும் செயற்பாடுகள் தொடர்பான சுங்க பிரிவுகளில் அனேகமான சம்பவங்களின் காரணமாக ஆரம்பிக்கப்படுகின்ற சுங்க விசாரணைகள் நடவடிக்கைகள் அந்த விசாரணைகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய திட்ட முறைமையொன்று காணப்படாது இருந்ததுடன் ஒவ்வொரு பிரிவுகளும் தனித்தனியாக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு விசாரணை இறுதியின் பின்னர் வெகுமதி செலுத்துவதற்காக பணம் அனுப்பப்படுகின்றது. விசாரணை கோவை தொடர்பான கோவைகள் ஒவ்வொரு பிரிவுகளிலும் பரவலாக காணப்படுவதுடன் அதன் பிரகாரம் விசாரணை செயல் முன்னேற்றம் தொடர்பாக முகாமைத்துவம் எடுப்பதற்கும் மற்றும் செயலாற்றலை பரீட்சிப்பதற்கும் தேவையான மத்தியப்படுத்தப்பட்ட தரவு தகவல் முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை. | இது தொடர்பாக மத்தியப்படுத்தப்பட்ட முறைமைக்காக CCR பதிவேடு பேணிச்செல்லப்படுவதுடன் அதனை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | மத்தியமடுத்தப்பட்ட தரவு தகவல் முறைமையொன்று இலங்கை சுங்கத்திடம் பேணிச்செல்லப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்க விசாரணைகளுக்காக தேவையான எரிபொருள் செலவினத்தை தீர்ப்பதை நோக்காக கொண்டு வெகுமதி நிதியத்தின் உப நிதியம் ஒன்றாக எரிபொருள் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் போதும் ரூபா | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | நிதியத்தை பயன்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 181,298,698 தொகை அந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் விசாரணை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற எரிபொருள் கிரயம் சுங்கத்தின் பொது செலவின தலைப்பில் செலவு வைக்கப்படுவதன் காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையும் அந்த நிதியத்தில் இருந்து எந்தவொரு செலவினமும் செய்யப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 554,500 செலவினம் செய்யப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் சகல சில தேவைகள் இன்றி தொடர்ச்சியாக இந்த நிதியத்திற்கு பணம் சேகரிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது இறுதியில் உள்ளவாறு அந்த நிதியத்தின் மீதி ரூபா 940,499,772 ஆக காணப்பட்டது. | | |
| (ஆ) | வெகுமதி நிதயத்தின் உப நிதியம் ஆன போதைப் பொருள் சுற்றி வளைத்தலுக்காக பங்கு பற்றுகின்றவர்களுக்காக செலுத்துகின்ற போதைப்பொருள் நிவாரண நிதியம் (நாக்கொட்டிக் நிதியம்) மீளாய்வாண்டின் போது ரூபா 61,565,304 செலவு வைக்கப்பட்டிருந்த போதும் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | நிதியத்தை பகிர்ந்தளித்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது எரிபொருள் நிதியம், போதைப்பொருள் நிவாரண நிதியம், உதவியாளர் சேவை வழங்குகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக செலுத்தும் நிதியம் (2.5 சதவீத நிதியம்) மற்றும் ஏனைய ஒதுக்க நிதியங்கள் என்ற நிதியங்களின் ஒட்டு மொத்த திரண்ட மீதி ரூபா 1,420,288,652 இனால் ரூபா | சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (2)(ஆ) இன் பிரகாரம் வெகுமதி பணம் செலுத்துவதற்கான கோவைகள் சமர்ப்பிக்கும் போது புதிய நிதியத்திற்காக வெகுமதி கோவையின் மொத்த தொகை ஏதாவது சதவீதம் ஒன்று ஒதுக்கப்படுகின்றமையால் | நிதியத்தை பகிர்ந்தளித்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 818,564,381 அதாவது 58 சதவீத அளவு 2017 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் ரூபா 384,985,028 அதாவது 27 சதவீதம் ஆன மீதி 02 – 05 வருடங்களுக்கிடையேயான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியாகும். அதன் பிரகாரம் திரண்ட மீதியின் காலப்பகுப்பாய்வை மேற்கொள்ளும் போது பல வருட காலம் முதல் நிதி செலவிடலின் தேவையின்றி இந்த உப நிதியம் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அந்த தொகை இந்த நிதியத்திற்காக செலவு வைக்கப்படுவதுடன் செலுத்துதல்கள் உரிய கோரிக்கையின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு கோரப்படும் வரை அந்த நிதியத்தின் மீதி திரண்டு காணப்படுகின்றது. | |
| (ஈ) | இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் போதும் ஏற்றுமதி செய்யும் போதும் அது தொடர்பாக இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் மற்றும் தவறுகள் தொடர்பாக சுங்க உத்தியோகத்தர்களினால் வெளிப்படுத்தப்பட்ட அல்லது ஒற்றர்களினால் வழங்கப்பபடுகின்ற தகவல்களின் அடிப்படையில் சுங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதுடன் சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளினால் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற சுங்க விசாரணைகள் காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 8450 விசாரணைகள் காணப்பட்டது. அதில் 3080 விசாரணைகள் 05 வருடங்களை விடவும், 4348 விசாரணைகள் 02 முதல் 04 வருடங்கள் வரையும் 1022 | சுங்க விசாரணைகளை பூர்த்தி செய்தல் தாமதத்திற்கான காரணங்கள் பின்வருமாறு தாக்கமளித்திருந்தது.<br>உரிய தரப்பினர்<br>i. நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அனுப்பியமை மற்றும் அந்த செயற்பாடுகள் தாமதம் அடைந்தமை,<br>ii. முறையாக சமூகம் அளிக்காமை<br>iii. சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது நிதியமைச்சரிற்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டமை.<br>iv. விசாரணைகளுக்காக கோரப்பட்ட ஆவணங்கள் சுங்கத்திற்கு கிடைக்கப் பெறுவதற்கு கவனத்தில் கொள்ளக் கூடிய காலம் எடுத்தமை.<br>v. கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் தாக்கம் | விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விசாரணைகள் ஒரு வருடத்திலும் தீர்வு காணப்படாமல் தாமதமாக காணப்பட்டது. விசாரணைகள் தாமதம் ஆனதன் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் அழிவடைந்தமை பாவணையில் இருந்து நீங்கியமை கடந்தகால பிற்பட்ட காலப்பகுதியில் உரியபெறுமதி பெற்றுக்கொள்வதற்கு முடியாது இருந்தமை ஒற்றர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தைரியம் இன்மைக்கு உட்பட்டமை போன்ற பாதகமான நிலைமைகள் எழுந்திருந்தது. மேலும் இவ்வாறு விசாரணை கோவைகள் பூர்த்தி செய்வதன் தாமதத்தின் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமான பெறுவனவுகள் தாமதமாக இடம் பெற்றிருந்தது.

vi. பதவியணியினரின் பற்றாக்குறை

போன்ற விடயங்களாக இருந்த போதும் இதனை குறைக்கும வகையில் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.